www.Padasalai.Net www.CBSEtips.in

covai

11

Register No.

# காலாண்டுத் தேர்வு – 2023
# பொதுத்தமிழ்

மணி : 3.00 மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

I. பலவுள் தெரிக 14 x 1 = 14

1. "கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும் காலத்தால் சாகாததொல் கனிமங்கள்" – அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள் இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத
2. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
அ) மதிப்புக்கூட்டுப் பொருள்கள் ஆ ) நேரடிப் பொருள்கள்
1) அ – மட்டும் சரி 2) ஆ – மட்டும் சரி 3) இரண்டும் சரி 4) அ – தவறு, ஆ – சரி
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| 1) வெள்ளிவீதியார் | – | அ) புறநானூறு 4 |
| 2) அண்ணாமலையார் | – | ஆ) சி.சு. செல்லப்பா 3 |
| 3) வாடிவாசல் | – | இ) குறுந்தொகை 1 |
| 4) இளம்பெருவழுதி | – | ஈ) காவடிச்சிந்து 2 |

4. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
5. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?
அ) இயற்சீரும் ஆசிரியத்தளையும் ஆ) ஆசிரியஉரிச்சீரும் வெண்டளையும் இ) ஆசிரியத்தளையும் வெண்டளையும் ஈ) வெண்சீரும் இயற்சீ(ரு...
6. இலக்கணக்குறிப்பு தருக. சுடச்சுட
7. உவமை தோன்றா இடம் எது? அ) படிமம் ஆ) வினை இ) பயன் ஈ) மெய்
8. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழி பெயர்ப்பாளர் ஆ) தலைமை துவிபாஷி இ) இந்தியாவில் பெப்பிரு ஈ) உலக நாள்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
9. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து..........நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
10. எதிர்கால இடை நிலைகளை எழுதுக.
அ) த், ட், ற், ன் ஆ) அ, அல், இல் ஆ) கிறு, கின்று, ஆனின்று ஈ) ப், வ்
11. பிரபஞ்சன் எழுதியதில் சாகித்ய அகாதமி பரிசுபெற்ற நூல் எது?
அ) வானம் வசப்படும் ஆ) தகப்பன் கொடி இ) நெரிக்கட்டு ஈ) அறம்
12. பொருள் கூறுக. மருந்துழைச் செல்வான்
13. தவறான இணையைத் தேர்வு செய்க. அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்
இ) கடல் + அலை – உயிர் + மெய் ஈ) மண் + வளம் – மெய் + மெய்
14. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

## பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 x 2 = 6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
17. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
18. காவடிச் சிந்து என்பது யாது?

### பிரிவு – 2

2 x 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 x 2 = 14

22. மொழிக்கு முதல்வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
23. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை
24. புணர்ச்சி விதி தருக (ஒன்றனுக்கு மட்டும்) 1. புலனறிவு 2. வழியில்லை
25. வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
தமிழர் ஆறறு தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய்வெட்டி பாசனம் செய்தனர்.
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. குரை, குறை (அ) பொரி, பொறி
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அறிவில்லாதவன்.
28. ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
1. Classical Language 2. Prefix
29. தகப்பன் – இச்சொல்லின் சொற்சுவை தருக.
30. உறுப்பிலக்கணம் தருக (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) 1. அறிந்து 2. நெருங்கின
31. பிறமொழிச் செநாற்களை தமிழாக்கம் செய்க. 1. விசா 2. வருடம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net @PRITHVI

## பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 x 4 = 8

32. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
33. மேகத்திடம் கூறுவதுபோல் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
34. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
35. "சலசல வாவியில் செங்கயல் பாயும்" – இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 x 4 = 8

36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
37. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் – குறிப்பு வரைக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
39. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 4 = 12

40. உவமை அணியை விளக்குக. **(அல்லது)**
சொற்பொருள் பின்வரும் நிலையணியை எழுதுக.


41. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

மீன்கள்கோடி கோடி சூழ வெண்ணிலாவே ! ஒரு
வெள்ளியோட்டமபோல வரும் வெண்ணிலாவே !
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே ! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே !
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே ! பகல்
கூட்டினில் உறங்குவாயோ ? வெண்ணிலாவே !
பந்தடிபோம் உன்னையென்று வெண்ணிலாவே ! நீயும்
பாரில் வர ஆக்கினையோ? வெண்ணிலாவே !

– கவிமணி

41. பொதுவியல் திணையைத் தகுந்த உதாரணத்துடன் விளக்குக. **(அல்லது)**
குறிஞ்சித் திணையை விளக்குக.

42. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்தி சொற்களை உருவாக்குக.




43. தமிழாக்கம் தருக.
1) Culture does not make people. People make culture.
2) Education is the most powerful weapon, which you can use to change the world.
3) Roads were made for journeys not destinations.
4) Simplicity is nature's first step, and the last of art.

43. **காதுகேளாதவர்களுக்கான மாற்று வினா.**

'தமிழ் என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொரி கவிதை என்பனவற்றைத் தாண்டிப் "பல்கலைப்புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே," "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ் மாலை" என்றே குறிப்பது இங்கே எண்ணத்தகும்.

**வினாக்கள் :** 1) தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை? 2) பத்தியிலுள்ள அளபெடைகளைக் கண்டறிக. 3) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது? 4) இப்பத்திக்கு ஒரு தலைப்பு எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 x 6 = 18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.
**(அல்லது)**
ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" – இக்கூற்றினை மெய்ப்பிக்கவும்.
**(அல்லது)**
ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்வீர்கள் என்பதை விவரிக்கவும்.

46. அ) பாரதியின் இதழனார் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?
**(அல்லது)**
ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) "உண்டாலம்ம" ..........எனத் தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக.
ஆ) 'நன்று' என முடியும் குறட்பாவை எழுதுக.



@ PRITHVI covai
www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com